2006 ஆகஸ்ட் 2] [திரு. தி. வேல்முருகன்]

அதேபோல, லெபனான் நாட்டிலே போர் ஏற்பட்டபோது, தமிழ்நாட்டிலிருந்து, ஆயிரக்கணக்கான தமிழர்கள், அந்தப் போரினால், குண்டுமழைக்குப் பலியாகிவிடுவார்களோ என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியைப் பெறுவதற்கு முன்பாக தமிழகத்தினுடைய நிதியினைச் செலவிட்டு, தாய்த் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து இருக்கிற அந்த நல்ல உள்ளம் படைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டி, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த எழில் அரசனுடைய உடல், விரைவாக தாய் மண்ணிற்குத் திரும்புவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்து எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கக்கூடியதுதான். வெளிநாடுகளுக்குச் சென்று வேலை தேடுகின்ற வேதனை, இன்னமும் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்ற வரையில் இந்த நிலை தொடரத்தான் செய்யும். இருந்தாலும், அவ்வப்போது ஏற்படுகின்ற, இந்தத் துன்ப துயரங்களை அகற்றுகின்ற வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அவர் குறிப்பிட்ட எழில் அரசனுடைய உடலை இங்கே கொண்டுவருவதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) மாங்காடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலர்கள் சண்டையிட்டுக் கொண்டதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள் துறைக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னால், இன்று படிப்படியாக அந்தத் துறை சீர்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. ஆனால், நேற்று மாங்காடு காவல் நிலையத்தில் இரண்டு தலைமைக் காவலர்கள் மாமூலை பிரித்துக்கொள்வதிலே அவர்கள், ஒருவருக்கொருவர் கட்டிப்புரண்டு, காவல் நிலையத்திலேயே சண்டையிட்டு, இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் எல்லா காவல் துறை உயர் அதிகாரிகள் மூலமும், அதேபோல உள் துறை செயலாளர் மூலமும், கடுமையான ஓர் எச்சரிக்கை விடுத்து, காவல் நிலையங்களில் இதுபோன்று நடக்கக்கூடிய நிகழ்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியிலும் இது மாமூலாக நடைபெறுகின்ற காரியம்தான். ஏற்ற நடவடிக்கை உரிய நேரத்திலே எடுக்கப்படும்.

(உ) சிக்–குன்–குன்யா நோயினால் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குமுன் தினம்கூட, என்னுடைய தொகுதியிலே சோட்டாபாய் என்றவருடைய 14 வயது நிரம்பிய ஓர் இளம்பெண், நூர்ஜஹான் என்ற பெண், சிக்–குன்–குன்யா நோயினால் பாதிக்கப்பட்டு மரணம் அடைந்திருக்கிறார். இந்த அரசாங்கம் இந்த சிக்–குன்–குன்யா நோயைத் தீர்ப்பதற்கு போதிய மருத்துவ வசதியை ஏற்படுத்தாததால், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய் தொடர்ந்து தமிழகத்தைத் தாக்கிக்கொண்டு இருப்பதால், என்னுடைய சட்டமன்றத் தொகுதியிலே மாத்திரம் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இன்றைக்கு இந்த சிக்–குன்–குன்யா நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். கடந்த 2, 3 தினங்களுக்குமுன் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில் யாருக்குமே சிக்–குன்–குன்யா நோய் தாக்கப்படவில்லை என்றார். அப்படி என்றால், இந்த நூர்ஜஹான் என்ற பெண்மணி நேற்றைக்கு முன்தினம் சிக்–குன்–குன்யா நோயால் தாக்கப்பட்டு போதிய மருத்துவ வசதி தர இயலாததால் தற்கொலைக்கு உள்ளானார்கள்...

முற்பகல் 9–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நெடிய விளக்கம் தேவையில்லை. இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள். (குறுக்கீடு)